சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

வழக்கு சொத்துக்கள் மூதாதையர் சொத்து என்பதை காட்ட நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது சாட்சி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று கூறுகிறார். வழக்கு சொத்துக்கள் விவசாய நிலம் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1984 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் என் தகப்பனார் தாவா சொத்தை பெற்ற பிறகு நான் தாவா சொத்துக்களில் அனுபவத்தில் இருக்கிறேன் என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு 2008ஆம் ஆண்டில் தான் தெரியவந்தது. வாதித்தரப்பு சான்றாவனம் 4, 5 இல் 13.06.1990 மற்றும் 23.11.1984 ஆகிய தேதிகளில் இரண்டு மற்றும் மூன்றாம் பிரதிவாதிகளுக்கு சுவாதீனம் கொடுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை. அவ்வாறு சுவாதீனம் கொடுக்கப்பட்டு விட்ட நிலையில் தான் நான் எந்த ஆவணமும் அனுபவத்தை காட்டும் வகையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதித்தரப்பு சான்றாவனம் 5 இல் என் தகப்பனார் தனக்காகவும் தன் மைனர் மக்களுக்காகவும் என்று காட்டி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு சில மாதங்களுக்கு முன்பு குமார் இறந்து விட்டதாக நான் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் குறிப்பாக எந்த தேதியில் இறந்தார் என்றால் தெரியாது. குமாரின் இறப்புச் சான்றதழ இந்த நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டில் உள்ளது. 2008 ஆம் ஆண்டில் என் தகப்பனார் விற்பனை செய்து விட்டார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றும் 2011ல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு நான் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு

அனுப்பினேன் என்றால் சரிதான். எனது முகவரி 2/234, கோவளம் செங்கல்பட்டு என்றால் சரிதான். நான் அறிவிப்பு கொடுத்த காலத்தில் முதல் பிரதிவாதியாகிய என் தகப்பனார் என்னுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் என் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் என் தகப்பனார் தான் வழக்கு போட்டார். என் தகப்பனார் எந்த நீதிமன்றத்தில் எந்த வழக்கு தாக்கல் செய்தார் என்றால் இந்த வழக்கு தான் தாக்கல் செய்தார்.

( நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)